**செய்தி வெளியீடு எண்: 133** **நாள்: 20.02.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில், பாக் வளைகுடா பகுதி மீனவர்களின் இழுவலைப் படகுகளை மாற்றி ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக பரவலாக்கும் திட்டத்தின் கீழ், 3 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தால் முதற்கட்டமாக கட்டி முடிக்கப்பட்ட 4 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பயனாளிகளின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், 18 கோடியே 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வண்ண மீன் காட்சியகத்துடன் கூடிய மெய்நிகர் காட்சியகம், வண்ணமீன் வானவில் விற்பனை வளாகம், கால்நடை பராமரிப்புத் துறை கட்டடங்கள், சி.டி. ஸ்கேன் கருவிகள், துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு மீனவர்கள் பாக் வளைகுடாவில் தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் போது, இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளுக்கு ஆளாவதால், மீனவர்களது இழுவலைப்படகுகளைக் கொண்டு மீன்பிடிக்கும் தொழில் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகிறது. எனவே, பாக் வளைகுடா பகுதியிலுள்ள இழுவலைப்படகுகளுக்கு மாற்றாக, மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் புதிதாக ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலை சூரை மீன்பிடிப்பு படகுகளை வழங்கி, அங்குள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்திடும் வகையில், பாக் வளைகுடா பகுதி மீனவர்களின் இழுவலைப் படகுகளை மாற்றி ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக பரவலாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, பாக் வளைகுடா பகுதி மீனவர்களுக்கு, மத்திய மற்றும் மாநில அரசுகள் 56 லட்சம் ரூபாய் மானியமாகவும், 16 லட்சம் ரூபாய் வங்கி கடனுதவியாகவும், 8 லட்சம் ரூபாய் பயனாளிகளின் முதலீடாகவும், மொத்தம் 80 லட்சம் ரூபாய் செலவில் ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்டி வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக, கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தால் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 4 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பயனாளிகளின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மேலும், சென்னை, சேத்துப்பட்டு பொழுதுபோக்கு மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்கா வளாகத்தில், 6 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 20 இருக்கைகள் கொண்ட குளிர்சாதன வசதிகளுடன் கூடிய மெய்நிகர் காட்சியக அரங்கம், தொடுதிரை கணினி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள வண்ண மீன் காட்சியகத்துடன் கூடிய மெய்நிகர் காட்சியகம்;

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மாதவரம் வளாகத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வண்ணமீன் வானவில் விற்பனை வளாகம்;

திருவண்ணாமலை மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம்; வேலூர் மாவட்டம் – காட்பாடியில் 52 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடம்;

தமிழ்நாட்டில் கால்நடைகளுக்கான மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் 3 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவை சிகிச்சை மற்றும் கதிரியக்க துறை மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள சி.டி. ஸ்கேன் கருவிகள்;

பால்வளத்துறை சார்பில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் 1 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 21 கோடியே 27 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் பல்வேறு

திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) திரு.சி. காமராஜ், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் டாக்டர் கீ.சு. சமீரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சி. பாலச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**